தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 11.11.2020**

முன்னிலை

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-11281/SCIC/2019**

திரு வே.ராஜா .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் /
தொழிலாளர் உதவி ஆணையர், .. பொது அதிகார அமைப்பு
சாயிநாதபுரம், வேலூர்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 08.06.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும், கடைகள், வணிக நிறுவனங்கள் 24 மணி நேமும் திறந்திருக்கலாம் என்று 07.06.19-ல் இந்து தமிழ் திசை செய்தித்தாளில் வெளியான அரசாணையின் நகல் கோரியுள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 19.09.2019-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 06.11.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 09.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 25.09.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 30.09.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.ஆ/648/2020, நாள் 30.09.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 11.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். SA-11281/**SCIC/2019**</u>

<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
தொழிலாளர் உதவி ஆணையர்,
சாயிநாதபுரம்,
வேலூர்.

<u>மனுதாரர்</u>

திரு வே.ராஜா, த/பெ.வேல்முருகன்,
எண்.5, பிள்ளையார் கோவில் தெரு,
பனந்தோப்பு கிராமம், திருவலம் அஞ்சல்,
காட்பாடி வட்டம், வேலூர்-632 515.

PR/PS 16.11.2020